

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அடுத்த மகாதேவர் மலை மகாதேவர் சுவாமி கோவில் அன்னதானதிட்டத்திற்கு இந்து சமய அறநிலையத் துறைகமிஷனர் பொது நிதியில் இருந்து ரூ.17 லட்சம் வழங்கப்பட்டுள்ள ஆணையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நா.அசோகனிடம் வழங்கினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ,மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம் .எல் .ஏ, அறங்காவலர் குழு தலைவர் ஜெயக்குமார், கோவில் செயல் அலுவலர் சண்முகம்,பகுதி கழக செயலாளர் வி.ஜி.கே.சுந்தர விஜி ஆகியோர் உள்ளனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.09.2024) ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (Formula 4 Indian Championship and Indian Racing Leaque) போட்டி வெற்றிகரமாக நடைபெற்றதை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சிறப்பாக பணியாற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களை பாராட்டி வழங்கிய சான்றிதழை செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன். பெருநகர் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# விருதுநகர் தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வேண்டுகோள்!



விருதுநகர், செப். 14-

விருதுநகர் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 16.09.2024 திங்கட்கிழமை மாலை 05.00 மணிக்கு, விருதுநகர் சரஸ்வதி கிராண்ட் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்/ நிர்வாகிகள், கழக பிற அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. நாடாளுமன்றத் தேர்தலில் 40/40 வெற்றிக்காக நன்றி தெரிவித்தல்.

2. வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் தி.மு.கழகம் வெற்றியினை பெற்றிட.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டங்கள் சார்பில் –

# பேரறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள் பேரணி - திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## அமைச்சர் இ,பெரியசாமி தலைமை! அமைச்சர் அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் வேண்டுகோள்!





திண்டுக்கல், செப். 14-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (15.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 09.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரிய சாமி அவர்களின் தலைமையில் திண்டுக்கல், மணிக்கூண்டிலிருந்து பேரணியாக புறப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட வுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணை பெருந் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் என அனைவரும் ஏராளமான தொண்டர்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இ.பெ.செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் – கழகப் பவள விழாவையொட்டி

# வீடுகள் - தெருக்கள் தோறும் கழகக் கொடி ஏற்றிடுவோம்!

## மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள்!



இராமநாதபுரம், செப். 14-

மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :-

தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரால் கட்டமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக மக்களுக்கு பணியாற்றி இந்த 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினை 15.09.2024ல் கொண்டாடுகிறது. பவள விழாவினை ஒட்டி கழக கொடிக்கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு அதில் அந்தந்த பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ண கொடியை ஏற்றி பட்டொளி வீசி பரிந்திட செய்திட வேண்டும் என்று மாவட்ட கழக கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அதன்படி வீதிகள் தோறும் பறக்கும் இரு வண்ணக் கொடி நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும் கழக கொடிகள் பறந்திடாத வீடுகளே இல்லை என்னும் வகையில் பவள விழாவினை முன்னிட்டு நம் இல்லங்களில், அலுவலகங்கள், வணிக வளாகங்கள், கழக கொடி ஏற்றி கொண்டாடுவோம் என திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், அறிக்கை விடுத்துள்ளார் எனவே இராமநாதபுரம்

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக , நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், கழகத்தின் பவள விழாவினை மாவட்டம் முழுவதும் கழகக் கொடியினை ஒவ்வொரு கிளைக் கழகங்களிலும் கழகத் தோழர்கள் இல்லங்களிலும் கழக அலுவலகம், வணிக வளாகங்களில் ஏற்றி வைத்து எழுச்சியாக கொண்டாட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## பேரறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள் விழா!

# சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு கழகத்தினர் மரியாதை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



சிவகங்கை. செப். 14-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தின் சொந்தக்காரரும் கழகத்தை உருவாக்கிய தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் குடியிருந்து வரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாள் நாளை சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் காலையில் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி, ஆகிய ஊர்களில் உள்ள பேறிஞர் பெருந்தகை அண்ணா திருவுருச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது. நான் அன்று காலை சரியாக 8.00மணி. அளவில் திருப்பத்தூர் பேரூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் திருப்பத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கிட உள்ளேன். அதனை தொடர்ந்து மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர்,கழகம் மற்றும் ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் அந்தந்த பகுதியில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், நகர் கழக நிர்வாகிகள் சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அண்ணாவின் 116 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கழகத் தலைவர் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் 3 1/2 ஆண்டுகள் சாதனைகளை விளக்கியும் பொது மக்களுக்கு எடுத்து கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன் . அதனை தொடர்ந்து நாளை 15ம்தேதி முதல் 17ஆம் தேதி வரை மாவட்டத்தில் அனைத்து இல்லங்களிலும் தெருக்களிலும் கிராமங்கள் தோறும் கழகக் கொடி கம்பங்களை புதுப்பித்து இரு வண்ணக் கொடிகளை ஏற்றி பேரறிஞர் அண்ணாவின் புகழ் பட்டி தொட்டிவரை சென்றடையுமாறு பிறந்த நாளை சிறப்புடன் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாள் விழா

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகத்தினர் - திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் வேண்டுகோள்!



தூத்துக்குடி, செப். 14-

செப்டம்பர் - 15ம் தேதி பேரறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. பி. கீதாஜீவன் அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத்தை தோற்றுவித்தவரும், கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு கற்றுத் தந்தவரும், தமிழ் இனம், தமிழ் மொழி என்ற உணர்வுமிக்க கருத்துக்களை மக்களிடம் பரப்பி தமிழருக்கு பாதுகாப்பு இயக்கமாக தி.மு. கழகத்தை மாற்றி அதன் மூலம் கழக ஆட்சியை தமிழ்நாட்டில் அமைத்தவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்,

அவர் முதலமைச்சராக இருந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழ்நாடு என பெயர் மாற்றம், இருமொழிக் கொள்கை. சுய மரியாதை திருமணச் சட்டம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தார்.

அன்னாருடைய 116 வது பிறந்த தினம் வருகிற செப்டம்பர் 15 ம் தேதி ஞாயிற்று கிழமை அன்று வருகிறது. அன்றைய தினம் காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்டச் செயலாளராகிய என்னுடைய தலைமையில் தூத்துக்குடி காய்கறி மார்க்கெட் சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், மாநகர வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

மேலும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக அளவில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தை வைத்து மலர் அஞ்சலி செலுத்திடவும் கழக நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.




கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 16வது நிதிக்குழு தொடர்பான மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித் துறை, 16வது நிதிக்குழு சிறப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னிட், நிதித்துறை அரசு துணை செயலாளர் (வரவு செலவு) பிரத்திக் தாயள், ஆகியோர் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் நிகழ்வாக அயலக அணி அமெரிக்கா ( வடக்கு) மற்றும் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் அமெரிக்கா இணைந்து நடத்திய விழாவில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரையாற்றினார். இதில் தி.மு.க. அயலக அணிச் செயலாளர் – எம்.எம்.அப்துல்லா எம்.பி., அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, தி.மு.க. அயலக அணி இணைச் செயலாளர் உறுப்பினர் அயலகத் தமிழர் நல வாரியம் புகழ் காந்தி, உறுப்பினர் அயலகத் தமிழர் நல வாரியம் கால்டுவெல் வேள்நம்பி, தி.மு.க. அயலக அணி அமைப்பாளர், அமெரிக்கா (வடக்கு) விஸ்கான்ஸின் சிவா ஆகியோர் பங்கேற்றனர். பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம், அமெரிக்கா ம.வீ. கனிமொழி நன்றியுரையாற்றினார்.